தமிழ் படி

(மூன்றாம் இதழ்)

88



தமிழ் படி

(மூன்றாம் இதழ்)

*

ஆசிரியர் :

முதியோர் கல்வி - கோபால்

தென்னிந்திய

முதியோர் கல்வி கூட்டுறவு கழகப்

பதிப்பகம், லிமிடெட்,

10, நரஸிங்கபுரம் தெருவு, சென்னை-2.

டெலிபோன் : 85397

விலை அணா மூன்று

முதல் பதிப்பு—ஜனவரி 1951
இரண்டாம் பதிப்பு—அக்டோபர் 1953

PRINTED AT
THE CENTRAL CO-OPERATIVE PRINTING WORKS, LTD.,
1/17, MOUNT ROAD, MADRAS.

தமிழ் மக்கள்

பண்டைத் தமிழ் மக்கள்

தமிழ் மொழி பேசப்படும் நாடு தமிழ் நாடாகும். தமிழ் நாட்டில் வாழ்பவர்கள் தமிழர்கள் எனப்படுவார்கள். பண்டைக் காலத்துத் தமிழர்கள் அறிவில் சிறந்தவர்களாயும் மனிதத் தன்மை நிரம்பியவர்களாயும் இருந்தார்கள். அதாவது அவர்கள் தங்கள் மனசாட்சிக்கு விரோதமாக ஒருபோதும் நடவார்கள். மனிதத் தன்மை உடையவர்களை மக்களென்றும், இல்லாதவர்களை மாக்களென்றும் பழந் தமிழர்கள் அழைத்து வந்தார்கள். கல்வி அறிவு இல்லாதவர்களும் விலங்கினத்தில் சேர்க்கப்பட்டனர்.

வாழ்க்கை

தமிழர்கள் தங்கள் உடல், உள்ளம், உயிர் மூன்றையும் நன்றாகக் காப்பாற்றி வந்தார்கள். உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது உண்ணும் உணவு. உணவு உழவினால் வருவது. உலகத்தில் நடைபெறும் பலவிதத் தொழில் களுக்கும் உழவே ஆதாரம் என்பதைத் தமிழர்

கள் அறிந்து இருந்ததனுல் அவர்கள் அத் தொழிலை முதன்மையாகக் கருதினூர்கள். உழவுத் தொழிலைச் செய்து வந்த வேளாளர்கள் மிகவும் மேன்மையாகப் பாராட்டப் பட்டனர். அக்கால வேளாளர்களுக்கு மரியாதைப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் அரசர்களுக்கு ஆலோசனை சொல்லும் மந்திரிகளாகவும் அரசர்களுக்குத் தங்கள் பெண்களைக் கலியாணம் செய்துகொடுக்கும் நிலைமையிலும் இருந்தார்கள்.

உள்ள வளர்ச்சிக்கு வேண்டியது அறிவாகும். அந்த அறிவு கல்வியால் விருத்தியாகிறது. அக்காலத்தில் மக்களில் அநேகம்பேர் கல்வி அறிவு உடையவர்களாய் இருந்தனர். தன் மகனுக்குக் கல்வி கற்பிப்பது தந்தையின் முதற் கடமையாக இருந்தது. அக்காலத்துக் கல்வி பாடம் சொல்லுமுறை கேட்குமுறை என்று பிரிக்கப்பட்டு இருந்தது. கல்வி போதிக்கும் உபாத்தியாயர் உயர்வாக மதிக்கப்பட்டார். அப்படியே புலவர்களும் நன்ருகப் போற்றப் பட்டனர். பல புலவர்கள் அடிக்கடி ஒன்று கூடி நூலாராய்ச்சி நடத்தினர். புலவர் கூடிய சபைக்குச் சங்கம் என்று பெயர். பண்டைத் தமிழகத்தில் பல சங்கங்கள் இருந்தன. அரசர் கள் புலவர்களை ஆதரித்தது அல்லாமல் தாங் களும் கல்வியில் சிறந்தவர்களாயிருந்தனர்.

இப்படிப்பட்ட கல்வியில் பெண்களும் சிறந்திருந்தனர். அவர்களில் ஔவையார், வெண்ணியக்குயத்தியார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், பொன்முடியார், காக்கைபாடினியார். நச்செள்ளையார் என்பவர்கள் சிலர்.

உயிர் வளர்ச்சிக்கு அறத்தை அதாவது தருமத்தை முதலாவதாகக் கொண்டனர். தருமம் பலவகைப்பட்டதாயினும் அவற்றில் ஈகையை அதாவது கொடுத்தலைப் பெரிதும் பாராட்டினர். அக்காலத்து அரசர்கள் ஈகையில் சிறந்திருந்தார்கள். அரசர்களைப் போலவே குடிமக்களும் இருந்தனர். ஒருவர் யாசித்த பொருளை கொடுக்க வசதியில்லாமல் இருத்தலே எல்லாவகைத் துன்பத்திலும் மேற்பட்ட துன்பம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஈகைக்கு அடுத்தபடியாக ஒழுக்கத்தை எண்ணினர். பொய் சொல்லாமை நன்றியறிவு ஆகிய நற்குணங்களும் தமிழர்களிடத்தில் நிறைந்திருந்தன.

நாகரீகம்

ஒரு நாடு நாகரீகத்தில் உயர்ந்திருப்பதற்கு அந்நாட்டின் வியாபாரம், அரசியல், கலைகள், வீரம், புலமைத்திறம் ஆகியவைகளே காரணங்களாகும்.

நகர் அமைப்பு

தமிழ் நாட்டில் அக்காலத்தில் பல நகரங்கள் இருந்தன. அவைகள் உயர்ந்த நாகரீக முறையில் அமைக்கப்பட்டிருந்தன, ஒழுங்கான வீதிகளும், முடுக்குத் தெருக்களும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்தி என்னும் சந்திகளும், அம்பலம், மன்றம், முதலிய பொது இடங்களும் இருந்தன. நகரத்தில் வரும் சாக்கடை நீர் பூமிக்கு அடியில் ஓடும்படி செய்யப்பட்டிருந்தது. வேண்டும்போது நீரைக் கொண்டு வருவதும், வேண்டாதபோது போக்கியும் விடும் யந்திரங்களும், மாலையில் நகர ஜனங்கள் உலாவுவதற்கு சோலைகளும், பலவகைக் கோயில்களும் இருந்தன.

அரசியல்

அரசர்கள் தங்களுக்குக் கிடைத்த அதிகாரம் குடிகளுக்கு நன்மை செய்வற்கே என்று உணர்ந்திருந்தனர். குடிகளால் தூற்றப்படுவதற்கு அவ்வரசர்கள் மிகவும் அஞ்சினர்கள். குடிகளுக்கு நன்மை தரும் செயல்களை ஆராய்ந்து செய்தனர். உழவிற்குப் பயன்படக் கூடிய நீர் நிலைகளை அமைத்தார்கள். குடிகளிடமிருந்து ஆறிலொரு பங்கு வரி வாங்கி அவ்வரியைக் குடிகளின் நன்மைக்காகவே செலவழித்தனர்.

வழக்குகளைத் தீர்த்து நியாயம் கூறுவதிலும் பண்டைத் தமிழ் அரசர்கள் நடுநிலைமை தவறாமல் இருந்தனர். தீர்ப்புக் கூறும் சபையில் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

வியாபாரம்

அக்காலத்தில் உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் நன்றாக நடந்து வந்தன. கப்பல் வியாபாரமும் செழித்திருந்தது கடற்கரையில் துறைமுகங்களும், கலங்கரை விளக்கங்களும் (லைட் அவுஸ்) இருந்தன. இறக்குமதி செய்யும் பொருள்களுக்கும், ஏற்றுமதி செய்யும் பண்டங்களுக்கும் சோழருடைய புலிப்பொறியாகிய முத்திரையையிட்டனர். அப்பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கி வந்தனர். கப்பல்கள் மூலம், யானை குதிரைகளும் வெளிநாட்டிலிருந்து வரவழைத்தனர்.

நகரங்களில் பெரிய அங்காடிக்கடைகள் இருந்தன. உள்நாட்டு வியாபாரத்திற்கும் சுங்கவரி உண்டு. அந்நாளில் வாணிபர் உயர்ந்த நிலையில் இருந்தனர். அவர்கள் லாபத்தை வெளிப்படையாகச் சொல்லி நேர்மையுடன் வியாபாரம் செய்தனர்.

கலைகள்

சிற்பம், ஓவியம், நெசவுத்தொழில், பொன் வேலை, மண்பொம்மைகள் செய்தல் முதலிய கலைகளில் தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள். மரத்திலும் கல்லிலும் பல சிற்பங்கள் அமைத்தார்கள். மிக புக மெல்லியதாகவும் வழவழப்பாகவும் உள்ள நேர்த்தியான ஆடைகள் நெய்தார்கள். பட்டாலும் மயிரினாலும் கூட ஆடைகள் நெய்யப்பட்டன. பொன் வெள்ளி முதலியவைகளால் நகைகள் செய்தார்கள்.

வீரம்

தமிழர்கள் வீரம் நிறைந்தவர்களாயிருந்தார்கள். தமிழ் நாட்டரசர்கள் பகைவர்களை வீரத்தோடு எதிர்த்தனர். போரில் காயம் படுவதையும் இறந்துபோவதையும் அவர்கள் உயர்வாக மதித்திருந்தார்கள். அக்காலப் பெண்களும் வீரம் மிகுந்தவர்களாய் இருந்தனர். ஒவ்வொரு பெண்மணியும் தன் மகன் வீரமகனாக வாழ்வதை விரும்பினாள். சண்டையில் தன் மகன் இறந்தான் என்று கேட்டபோது மகிழ்வடையும் தாய், அவன் போர் செய்யப் பயந்து தப்பி ஓடி வந்துவிட்டான் என்று கேட்கும்போது வெட்கமடைந்து வருந்துவாள்! சண்டைக்குச் செல்லும் கணவனுக்கும்

மகனுக்கும் வீர திலகமிட்டு வாழ்த்தி யனுப்புவாள்.

இல்வாழ்க்கை

பண்டைத்தமிழரின் இல்வாழ்க்கை மிகவும் சிறப்புற்றிருந்தது, கணவனும் மனைவியும் மிகவும் ஒற்றுமையுடனும், அன்புடனும் வாழ்க்கை நடத்தினார்கள். ஒருவர் துன்புறு வதை மற்றொருவர் சகிக்கமாட்டார். பெண் தன் கணவனை உயர்வாக மதித்திருந்தது போலவே ஆண்மகனும் தன் மனைவியை உயர் வாக மதித்திருந்தான். அவர்களின் அன்பு மிகவும் மேன்மைப் பட்டதாகவும், தெய்வீக மானதாகவும் இருந்தது.

தமிழ்நாட்டுச் சரித்திரம்

இந்திய தேசத்தின் தென் பாகத்திலிருப்பது நாம் வசிக்கும் தமிழ்நாடு. இத் தமிழ்நாட்டுக்கு வட எல்லை திருப்பதி. மற்ற மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. நமது நாட்டின் பழைய சரித்திரத்தை நமது முன்னோர்கள் கட்டிவைத்த கோயில்கள், கல்வெட்டுக்கள் முதலியவற்றால் தெரிந்து கொள்ளலாம்.

பழங்காலத்தில் நமது நாடு மூன்று பிரிவுகளாகப பிரிக்கப்பட்டு, சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அந்நாடுகளுக்கும் சேர நாடு சோழ நாடு, பாண்டிய நாடு என்று பெயர். திருவாங்கூர் சமஸ்தானம், மலையாளம், நீலகிரி ஜில்லாக்கள், கோயமுத்தூர், மைசூர் ஆகிய இரண்டிலும் சில பாகங்கள் சேர்ந்தது சேர நாடாகும். சென்னைக்குத் தெற்கே திருச்சிராப்பள்ளி வரை உள்ள ஜில்லாக்கள் சோழநாட்டுக்கடங்கியிருந்தன. மற்ற தமிழ் ஜில்லாக்கள் பாண்டிய நாட்டுக்குச் சொந்தமாயிருந்தன. இந்த மூன்று பெரிய அரசர்களைத் தவிர சில சிறிய அரசர்களும் மலையோரங்களில் அரசாட்சி செய்து வந்தார்கள்.

சோழர்

சோழ அரசர்கள் திருச்சிராப்பள்ளிக்கடுத்த உறையூரையும், காவிரிப்பூம் பட்டிணத்தையும் தங்கள் நாட்டுக்குத் தலைநகராகக் கொண்டனர். கி. பி. நாலாம் நூற்றுண்டு வரை சோழர்கள் செல்வாக்குடன் இருந்தார்கள். இந்தப் பழஞ் சோழர்களில் திருமாவளவன் என்று சொல்லப் படும் கரிகாலச்சோழன் முக்கியமானவன். இவன் தமிழ் நாடு முழுவதையும் ஆண்டு வந்தான். இவன் காலத்தில் வியாபாரமும் நாடும் செழித்திருந்தன.

இப்படி சீரும் சிறப்புமாக இருந்த சோழ மன்னர்கள். கி. பி. நாலாவது நூற்றுண்டில் தோன்றிய பல்லவர்கள் என்ற அரசர்களுக்குக் கீழ்ப்படியும்படி ஆகிவிட்டது. பல்லவர்கள் காஞ்சிபுரத்தை தங்கள் தலைநகரமாகக்கொண்டு அரசு செலுத்தத் தொடங்கினுர்கள். இந்தப் பல்லவர்களுக்குள் தலைசிறந்தவன் மகேந்திர வர்மன் என்னும் மன்னன். இவன் தமிழ் நாடெங்கும் பல கற்கோயில்கள் கட்டினுன். அவைகளுள் சித்தன்னவாசல் குகைக்கோயில் என்பது புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் உள்ளது. இவன் மகன் நரசிம்மவர்மனும் பெயர் சிறந்தவனுவான். இவன் வடநாட்டிலிருந்த

சாளுக்கிய மன்னன் புலிகேசி என்பவனை வென்று அவன் தலைநகரமாகிய வாதாபியையும் அழித்தான்.

மறுபடியும் கி.பி. 9-ம் நூற்றாண்டில் சோழர்களால் பல்லவ ஆட்சி அழிவடைய ஆரம்பித்தது. அதிலிருந்து சோழர்கள் திரும்பவும் சிறப்புடன் தமிழகத்தில் பெரும் பகுதியை ஆண்டுவந்தார்கள். பல்லவர்களுடைய ஆட்சியிலிருந்து சோழநாட்டை விடுவித்தவன் முதல் ஆதித்தன் என்னும் சோழனாவான். கி. பி. 985-ல் பட்டத்துக்கு வந்த முதலாவது இராசராசன் ஆட்சியில் நம் சென்னை மாகாணத்தில் முக்கால் பங்குக்கு மேலும் இலங்கைத் தீவும் அடங்கியிருந்தன. தஞ்சையிலுள்ள பெரிய கோயிலைக் கட்டியவனும் இவனே. கி.பி. 12-வது நூற்றாண்டு வரை அரசு செலுத்திய குலோத்துங்க சோழன் காலத்தில் இராமானுசர் என்னும் பெரியார் தோன்றினார். இவன் மன்னார் குடியிலிருக்கும் விஷ்ணு கோயிலைக் கட்டினான். சுங்கம் வாங்குவதை இவன் நிறுத்தியதால் இவனுக்கு சுங்கந்தவிர்த்த சோழன் என்ற பெயர் உண்டாயிற்று இவன் காலத்தில் தமிழ்மொழி வளர்ந்தோங்கியது.

கடைசி இராச இராச சோழன் காலத்தில் சோழநாடு தாழ்வடைய ஆரம்பித்தது. சிறிது

காலத்திற்குப் பிறகு பாண்டியர் அரசாட்சியின் கீழ் சிறிது காலம் இருந்தது. இக்காலத்தில் டில்லியிலிருந்து வந்த மாலிக்காபூர் என்னும் சேனாதிபதி தமிழர் அரசாட்சியை சீர்குலையச் செய்துவிட்டான்.

சேரர்

சேரவரசர்கள் தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் உதவி செய்தவர்கள். சேரன் செங்குட்டுவன் என்னும் அரசன் இமயமலை வரையில் சென்று தமிழரசர்களின் புகழை நிலைநிறுத்தி, அங்குள்ள அரசர் பலரை அடிமை கொண்டு திரும்பினான். இவன் கற்புக்கரசியாகிய கண்ணகிக்கு கோயில் கட்டினான். இவன் தம்பி இளங்கோவடிகள் என்பவர் பெரிய புலவராவார். இவர்கள் வாழ்ந்த காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டாகும். வஞ்சி, கருவூர், திருவஞ்சைக்களம் முதலியன இவர்களுக்கு தலைநகராக இருந்தன. பிற்காலங்களில் இம்மன்னர்கள் தமிழ் மொழியைவிட்டு மலையாளத்தைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டனர். இப்பொழுதுள்ள திருவாங்கூர், கொச்சி அரசர்களும் இச்சேரர் வழியைச் சேர்ந்தவர்களென்று எண்ணப்படுகிறார்கள்.

பாண்டியர்

சேர, சோழ, பாண்டியரென்றும் மூன்று தமிழ் அரசர்களில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அதிக முயற்சி எடுத்துக்கொண்டவர்கள் பாண்டியர்களே ஆவார்கள். தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம், என்ற மூன்று சங்கங்களை யும் ஏற்படுத்தியவர்கள் இவர்களே. தமிழ் நாட்டின் தென்பாகம் கடலில் மூழ்கி விட்ட போது தலைச்சங்கமும், இடைச்சங்கமும் அதன் நூல்களும் அழிந்துவிட்டன. கடைச் சங்கத்தி லிருந்து நமக்குக்கிடைத்த நூல் தொல்காப்பியம் எனப்படுவது.

6-வது நூற்றாண்டில் களபரர் என்னும் ஒரு வகுப்பினர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி னார்கள்: 7-வது நூற்றாண்டில் மறுபடியும் பாண்டியர்கள் தலையெடுக்க ஆரம்பித்தார்கள். கி.பி. 11-12-வது நூற்றாண்டுகளில் பாண்டிய நாடு சோழ நாட்டுக்கு அடங்கியிருந்தது. 13-வது நூற்றாண்டில் மாறவர்மனும் சுந்தர பாண்டியனும் பாண்டிய நாட்டை சோழர் ஆட்சியிலிருந்து விடுவித்தனர். சிறிது காலத் திற்கு பின்பு பாண்டிய நாடு முகம்மதியர் கையி லும் அதற்குப் பிறகு விஜயநகர நாயக்கர்களிட மும் சேர்ந்துவிட்டது.

பாண்டிய நாட்டில் நாயக்கர் ஆட்சியை ஏற்படுத்தியவர் விஸ்வநாத நாயக்கர் என்பவர். இவர் விஜயநகர அரசராகிய அச்சுதராயரின் சேனதிபதியான நாகம நாயக்கரின் மகன். நாயக்கர்களுள் மதுரையில் அரசாண்ட திருமலை நாயக்கர் என்பவர் தலைசிறந்தவர். விஜயநகர மன்னர்களுக்குக் கப்பம் கட்டுவதை முதன் முதலாகச் கைவிட்டவர் இவரே. ஆனல் நாள டைவில் இவர் மகமதியர்களுக்குக் கப்பம் கட்டும் படி வந்தது. இவர் வழியில் வந்த மங்கம்மாள் என்ற அரசி சிறந்தவளாவாள். தஞ்சையில் நாயக்கர் ஆட்சியை ஏற்படுத்தியவர் சேவப்ப நாயக்கராவார்.

நாயக்கர்கள் காலத்தில் தமிழ் நாட்டில் ஐரோப்பா கண்டத்திலிருந்து பல கிறிஸ்தவப் பாதிரிமார்கள் வந்து தமிழைப் படித்து தமிழ் நாட்டில் தங்கள் மதத்தைப் பரப்பினர்கள். இப்படி வந்தவர்களுள் இத்தாலிய நாட்டி லிருந்து வந்து தமிழ் கற்றுக்கொண்ட பெஸ்கி என்னும் பாதிரியார் சிறந்த தமிழ் புலவரானர். முதல் முதல் தமிழில் அகராதி எழுதியவர் இவரே.

நாயக்கர்கள் காலத்துக்குப் பிறகு தமிழ் நாட்டில் சில பகுதிகள் மகாராஷ்டிரர் கையிலும் சில பாகம் துருக்கியர்கள் கையிலும் சென்றன

ஐதர், திப்பு சுல்தான் இருவரும் பலதடவை தமிழ் நாட்டைக் கொள்ளையடித்தார்கள். ஐரோப்பாவிலிருந்து வந்த வியாபாரிகளாகிய ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களும் உள் நாட்டு அரசர்களுக்குள் கலகம் உண்டாக்கி சண்டை செய்தனர். 19-ம் நூற்றூண்டில் தமிழ் நாட்டில் கிழக்கு இந்தியக் கம்பெனி யாரது ஆட்சி நிலைபெற்றது. இந்த குழப்ப மான காலங்களிலெல்லாம் தமிழ் மொழிக்கு சிறந்த ஆதரவாக இருந்தவர்கள் ராமனுதபுரம், எட்டியாபுரம் முதலியவற்றின் ஜமீன்தார்களும், திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீனத் தலைவர்களுமாவார்கள்.

பண்டைய குடி அரசாட்சி

ஊரில் உள்ளோர் எல்லோரும் கூடும் பொதுவிடத்திற்கு மன்றம், அம்பலம், சபை என்று முற்காலத்தியவர்கள் பெயர் வைத்திருந்தார்கள். அது ஊர் நடுவே வளர்ந்திருக்கும் ஒரு பெரிய ஆலமரத்தடியாகும். இம்மரத்தின் நிழலில்தான் ஊரில் உள்ளவர்கள் தங்கள் வழக்குகளைத் தீர்த்துக் கொள்வார்கள். வழக்கைத் தீர்க்கும்போது யாராவது பொய் சொன்னால் அம்மரத்தின் தளிர்கள் வாடிவிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.

எப்படி இந்தக் கிராமக் காரியங்கள் நடைபெற்று வந்ததென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு அவை (சபை) இருந்தது. அந்தந்தக் கிராமத்திலுள்ளவர்களே அந்தந்த அவைக்கு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நன்றாகப் படித்தவர்களாகவும், தூய வாழ்க்கை நடத்துபவர்களாகவும், கால்வேலி நிலமும் சொந்த வீடும் உடையவர்களாகவும், 35 வயதுக்குமேல் 75 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். பிறர் பொருளைத் திருடியவரும், கிராமக் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், கள்ளக் கையெழுத்துப் போட்டவரும், ஏதாவது குற்றம்

செய்து அதனுல் கழுதைமீது ஏற்றப்பட்ட வரும், லஞ்சம் வாங்கியவரும், அவருடைய உறவினர்களும் அங்கத்தினராவதற்கு ஒரு போதும் தகுதியாகமாட்டார்கள். அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் முறை கிராமத்திலுள்ள வகுப்பார் எல்லாரும் அவரவர் வகுப்பில் தகுதியுடையவர்களின் பெயரை ஒவ்வொரு ஓலை நறுக்கில் எழுதி, அதை அச்சபை நடுவே வைக்கப்பட்டிருக்கும் ஒரு வெற்றுக் குடத்தில் போடுவார்கள். எல்லோரும் அப்படிப் போட்டவுடன் குடத்தை நன்ருகக் குலுக்கி ஒரு அறியாச் சிறுவனைக் கொண்டு அந்த சபைக்கு எவ்வளவுபேர் வேண்டுமோ, அவ்வளவு துண்டுகளை எடுக்கச் சொல்வார்கள். இந்த மாதிரி ஒவ்வொரு வருடமும் தேர்தல் நடக்கும். இப்படி மக்களால் முழுமனதுடன் தெர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் நியாயத் தீர்ப்பு செய்து வந்தார்கள்.

ஒவ்வொரு கிராம சபையும் பல பிரிவுகளாகப் பிரிந்து கிராம வேலையைக் கவனித்து வந்தது. ஒவ்வொரு கிராமத்திலும் கணக்கு எழுதுவதற்கு ஒரு கணக்கன் உண்டு. கிராம சபை சரியாக நடக்கிறதா என்பதை அரசனும் தன் காவலாளிகள் மூலம் அடிக்கடி கவனித்து வந்தான்.

இந்திய நாட்டு பூகோளம்

நமது தேசத்தின் பெயர் இந்தியா. உலகத்திலுள்ள முக்கியமான தேசங்களில் இது ஒன்று. இது ஒரு தீபகற்பம். தீபகற்பம் என்பது மூன்று பக்கமும் தண்ணீரால் சூழப்பட்டு ஒரு புறம் நிலத்தோடு சேர்ந்திருக்கும் பூபாகம். வெள்ளையர்களின் தேசமாகிய இங்கிலாந்தைவிட இந்தியா 20 மடங்கு பெரியது. வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே கன்யாகுமரிமுனை வரை 2022 மைல் குறுக்களவும் மேற்கே பலுசிஸ்தானத்திலிருந்து கிழக்கே பர்மா வரை 2520 மைல் நீளமாகும்.

இந்தியாவின் எல்லை வடக்கே இமயமலை. தெற்கே இந்துமகாசமுத்திரம். மேற்கே அரபிக் கடல். கிழக்கில் வங்காள விரிகுடாக் கடல். இதன் கடற்கரை நேராக பிளவுபடாமல் இருக்கிறது. கரைக்கருகில் ஆழம் அதிகமில்லை. அதனால் சம சீதோஷ்ண நிலை ஏற்படுவதில்லை. அதாவது: 1. கோடையில் அதிக உஷ்ணம் இல்லாமலும், குளிர்காலத்தில் அதிகக் குளிரில்லாமலும் இருக்கும் நிலை. 2. கப்பல் தங்க இயற்கைத் துறைமுகங்கள் ஏற்படுவதில்லை. மேற்குக் கரையிலுள்ள பம்பாய் இயற்கைத் துறைமுகம். கிழக்குக் கரையிலுள்ள சென்னை

செயற்கைத் துறைமுகம். இந்தியாவிற்குத் தெற்கே இலங்கை, மேற்கே லட்சத்தீவு, மால் தீவு, கிழக்கே அந்தமான், நிக்கோபார் முதலிய தீவுகள் உள்ளன.

நம் தேசத்தின் வடக்கிலுள்ள இமயமலை உலகத்திலேயே மிகப் பெரிய மலை. இதன் உயர்ந்த சிகரம் எவரெஸ்ட்டாகும். மலை மிக உயரமானதால் அதன் சிகரங்கள் எப்பொழு தும் பனியால் மூடப்பட்டிருக்கும். இம்மலை அந்நிய நாட்டுப் படையெடுப்பைத் தடை செய்ய மிகவும் உபயோகமாக இருக்கிறது.

இமயமலைக்குச் சற்றுத் தெற்கில் மிகச் செழிப்பான சிந்து கங்கைச் சமவெளி இருக் கிறது. இந்தியாவின் மத்தியில் தட்சண பீட பூமியிருக்கிறது. இங்குதான் விந்திய சாத்பூரா மலைகள் உள்ளன. இம்மலைகள் இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் எல்லையாக உள்ளன. இம்மலைகளிலிருந்து ஆரவல்லி மலைகள் ஆரம் பித்து வடகிழக்கு திசையை நோக்கிச் செல்லு கின்றன.

அரபிக்கடல் ஓரமாக தென் வடக்காக ஒரு மலை செல்லுகின்றது. இதற்கு மேற்கு மலைத் தொடர் என்று பெயர். பம்பாய்க்கருகில் இருப் புப் பாதைகள் செல்வதற்கு உதவியாக இரண்டு கணவாய்கள் உள்ளன. மேற்கு மலைத்தொடர்

போக்கு வரத்தை சிறிது தடை செய்கிறது. இதேமாதிரி கிழக்குக் கடற்கரை ஓரமாகவும் ஒரு மலைத்தொடர் செல்லுகிறது. அதற்குக் கிழக்குத் தொடர்ச்சிமலை என்று பெயர். இது அதிக உயரமுமில்லை. சமுத்திரத்திற்கு அருகிலுமில்லை. மேற்கு மலைத்தொடரும் கிழக்கு மலைத்தொடரும் தெற்கே சேருமிடத்திற்கு நீலகிரிக்குன்று என்று பெயர். அதற்கு தெற்கே ஆனைமலை இருக்கிறது.

இந்தியாவின் வடமேற்கில் சிந்துநதி பாய்கிறது. அதன் உபநதிகள், ஜீலம், சீனுப், ராவி, சட்லெஜ், பியாவ்ஸ. இந்த ஐந்து நதிகள் பாய்வதால் அப்பிரதேசத்திற்கு பஞ்சாப் என்று பெயர். வடகிழக்கில் கங்கைநதி ஓடுகிறது. இதன் உபநதிகள், கோமதி, கோக்ரா, கண்டகி, யமுனை, சம்பல். இது பாயும் சமவெளியில் ஜன நெருக்கம் அதிகம். இங்கே பிரம்மபுத்திரா என்று மற்றொரு நதி ஓடுகிறது. இது சமவெளியில் பாயும்போது கங்கையுடன் கலக்கிறது.

தென்னிந்தியாவில் விந்திய மலையில் நர்மதை நதியும், சாத்பூரா மலையில் தப்தி நதியும் உற்பத்தியாகிறது. மேற்கு மலைத்தொடரில் இருந்து கோதாவரி, கிருஷ்ணை, காவிரி முதலான நதிகள் பாய்கின்றன. இவற்றுள்

மிகவும் நீளமானது கோதாவரி. காவிரிநதி ஓடுவதால் தஞ்சை ஜில்லா செழிப்பாகவுள்ளது. வைகை, தாமிரபரணி, பெரியாறு என்ற ஆறுகள் ஆனைமலையில் உற்பத்தியாகி மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களை செழிப்பாக்குகின்றன. வட, தென் பெண்ணை, பாலாறு, மைசூர் பீடபூமியிலும், மகாநதி கிழக்கித் தொடரிலும் உற்பத்தியாகின்றன.

விளைபொருள்கள்

விளைபொருள்களை இயற்கை, செயற்கை என இருவகையாகப் பிரிக்கலாம். இயற்கைப் பொருளில் தாதுப்பொருள், தாவரப்பொருள், பிராணிப்பொருள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தாதுப் பொருள்கள்: நிலக்கரி. வங்காளம், அஸ்ஸாம், ஹைதராபாத் ஆகிய இடங்களில் கிடைக்கிறது. வங்காளத்திலும், பீகாரிலும், சேலத்திலும் இரும்பு அகப்படுகிறது. உப்பு பஞ்சாபில் உப்பு மலைகளிலிருந்தும், கடற்கரைகளிலிருந்தும் எடுக்கப்படுகிறது. மண்ணெண்ணை பர்மாவிலும், ஈயம், தகரம், திருவாங்கூரிலும் கிடைக்கிறது.

தாவரப் பொருள்கள்: உஷ்ணப் பிரதேசங்களில் மூங்கில், பனை முதலிய மரங்கள் விளை

கின்றன. அஸ்ஸாமில் தேயிலை, சிங்கோனு, அரிசி விளைகின்றன. பஞ்சாபில் புல் அதிகமாதலால் ஆடு மாடுகள் அதிகம். கங்கைச் சமவெளியில் நெல், சணல் பயிராகிறது. சிந்து சமவெளியில் கோதுமை, பருத்தி விளைகிறது. தட்சணத்தில் பருத்தி, எண்ணெவித்துக்கள், தேங்காய், தேயிலை, நெல், தினை, கம்பு, சோளம் ஏராளமாக விளைகிறது. நீலகிரியிலும் அஸ்ஸாமிலும் காப்பி, தேயிலை விளைகிறது. திருவாங்கூரில் வாசனைத் திரவியங்கள் கிடைக்கிறது.

பிராணிப் பொருள்கள் : முசுக்கட்டை விளையும் இடங்களான வங்காளம், மைசூர் முதலிய இடங்களில் பட்டுப் புழுக்களின் கூடுகளிலிருந்து பட்டு எடுக்கப்படுகிறது. காஷ்மீரத்தில் செம்மறியாடுகள் அதிகம். ஆகவே அங்கு ஆடுகளிலிருந்து ரோமம் எடுக்கப்பட்டு கம்பளி ஆடைகள் செய்கிருர்கள். சென்னையில் தோல் அதிகமாகக் கிடைக்கிறது.

செயற்கைப் பொருள் : இயந்திரசாலைத் தொழில் விருத்தியாக இரும்பு, நிலக்கரி மின்சாரம் இவை மூன்றும் அருகிலேயே கிடைக்கவேண்டும். ஏற்றுமதி செய்ய போக்கு வரவு சாதனங்கள் அதிகம்வேண்டும்.

இந்தியாவில் இம்மூன்றும் ஒருங்கே கிடைக்காததால் அதிக இயந்திர சாலைகள் இல்லை. பம்பாயிலும் ஆமதாபாத்திலும் பருத்தி ஆலைகள் இருக்கின்றன. கல்கத்தா, டாக்கா முதலிய இடங்களில் சணல் ஆலைகள் உள்ளன. கான்பூரிலும் காஷ்மீரிலும் பட்டு நெசவு நடைபெறுகிறது. ஆக்ரா, காசி, அம்ருதசரஸ் முதலிய இடங்களில் செம்பு, பித்தளை, ஈயம் முதலிய உலோக வேலை நடக்கிறது. மதுரை, திண்டுக்கல், பாலக்காடு முதலிய இடங்களிலும் உலோக வேலையே. கைத்தறிநெசவு: மதுரை, காஞ்சி, ஆரணி, டாக்கா, ஒரலூர். இரும்பு வேலை டாடா நகரிலும், வங்காளத்திலும் நடைபெறுகிறது. கான்பூரிலும் சென்னையிலும் தோல் வேலை.

ஜனத்தொகை

நம் தேசத்தின்ஜனத்தொகை இப்பொழுது 40 கோடிக்குமேல் இருக்கும். இது உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகமாகும். சமவெளி, ஆற்றுப்படுகை விவசாயம் நடக்கும் இடம், இங்கெல்லாம் ஜனநெருக்கம் அதிகமாகவும், பாலைவனம், மலைப்பிரதேசம் ஆகிய இடங்களில் ஜன நெருக்கம் குறைவாகவும் இருக்கிறது.

பாஷை அல்லது மொழி: இந்தியாவில் 147 பாஷைகள் உள்ளன. தென்னிந்தியாவில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மகாராஷ்டிரம், துளுவம் முதலிய மொழிகளும், வட இந்தியாவில், வங்காளி ஹிந்தி, ஒரியா, குஜராத்தி, ஹிந்துஸ்தானி, பஞ்சாபி, ஸிந்தி, மராத்தி முதலிய பாஷைகள் முக்கியமாகப் பேசப்படுகின்றன.

போக்கு வரவு சாதனம்

வியாபாரமும், பிரயாணமும், சீக்கிரம் நடக்க போக்கு வரவு சாதனம் அவசியம். அவை நான்கு வகைப்படும். 1. இருப்புப் பாதை. 2. தரைமார்க்கம் (ரஸ்தா) ரஸ்தாக்கள் இந்தியாவில் அதிகமில்லை. 3. ஜலமார்க்கம் உள் நாட்டுப் போக்குவரவும், வெளிநாட்டு வியாபாரமும் நடக்க உபயோகப்படுகிறது. கங்கை முதலிய நதிகளில் உள்நாட்டுப் போக்குவரவும், கடல் மூலம் வெளிநாட்டு வியாபாரமும் நடைபெறுகிறது. 4. ஆகாய மார்க்கம். ஆகாயவிமானம் தபால் போக்குவரத்துக்கும், பிரயாணிகள் செல்வதற்கும், சமீப காலத்தில் உபயோகப்பட்டு வருகிறது.

வியாபாரம்

இந்தியாவில் வெளிநாட்டு வியாபாரத்தை விட உள்நாட்டு வியாபாரம் அதிகம்,

இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் : அரிசி, கோதுமை, பருத்தி, எண்ணெவித்துக்கள், சணல், அபின், தோல், தேயிலை, அரக்கு, ரோமம், அவுரி.

இறக்குமதிப் பொருள்கள் : பருத்திநூல், பருத்தி ஆடைகள், உலோக சாமான்கள், சர்க்கரை, இயந்திரங்கள், எண்ணெ, கம்பளி, பட்டு, மருந்து, தண்டவாளங்ள், கண்ணுடி சாமான்கள், வாசனை சாமான்கள்.

தென்னிந்திய
முதியோர் கல்வி கூட்டுறவு கழகப் பதிப்பகம், லிமிடெட்,
சென்னை-2.

● மக்களுக்காக, மக்களால் ஆக்கப்பட்ட முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை ஏழை மக்கள் அடையக் கூடிய எளிய விலையில் வெளியிட, நம் மாகாணத்தின் ஒரே ஒரு கூட்டுறவு பதிப்பகம்.

● ● அரசாங்கத்தின் முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை வெளியிடும் பதிப்பகம்.

● ● பாலர், முதியோர் கல்விப் பிரசுரங்கள், உபகரணங்கள் தயார் செய்து பதிப்பிக்கும் பதிப்பகம்.

● மக்கள் ஆதரவே எங்கள்

உழைப்புக்குச் செழிப்பும்,

வெற்றியும்

●

● முன் பணம் கட்டக்கூடிய, ஜில்லா, தாலூக்கா, பிர்கா விற்பனையாளர்கள் தேவை. தயவு செய்து விபரங்களுக்கு எழுதவும்.

ஜி. ஹரிசர்வோத்தம ராவ்,
தலைவர்

டி. ஜே. ஆர். கோபால்,
காரியதரிசி.

தலைமை காரியாலயம்:
10, நரஸிங்கபுரம் தெருவு, சென்னை-2.
டெலிபோன்: 85397